**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE,**
**THIRUVIDAIMARUTHUR.**

| | | | |
|---|---|---|---|
| Deposition of Witness for | : PW–1 | Date | : 11.02.2026 |
| Case No. | **: O.S.24/2024** | Nationality | : Indian |
| Name | : ஞானசௌந்தரி | Religion | : |
| Father's/Husband's Name | : பாஸ்கரன் | Age | : 55 |
| Village | : திருப்பனந்தாள் | | |
| Taluk | : | | |

<u>வா.சா.1</u>

சாட்சி சத்திய பிராமாணம் செய்து விசாரிக்கபடுகிறார்.

**4, 5 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

நான் எதற்காக இந்த வழக்கினை தாக்கல் செய்துள்ளேன் என்றால் எனது கணவர் பாஸ்கர் என்பவருக்கு நாங்கள் வாரிசு என்று சான்று கோரி தாக்கல் செய்துள்ளேன். 1 முதல் 3 பிரதிவாதிகள் எனது கணவருக்கு பிறந்த குழந்தைகள் என்று கூறுவதால் அவர்கள் எனது கணவருக்கு வாரிசு இல்லை என்றும் வாதிகள் மட்டும்தான் வாரிசு என்று வழக்கு போட்டுள்ளேன். வாசாஆ 8 எனது கணவருக்கு இரண்டு மனைவிகள் என்பதால் நீதிமன்றத்தில் மூலம் பரிகாரம் தேடிக்கொள்ள வட்டாட்சியர் வழங்கிய சான்று என்றால் சரிதான். மேற்படி ஆவணத்தை மறுத்து இந்த வழக்கை நான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். எனக்கும் எனது கணவர் பாஸ்கரனுக்கு பிறந்த குழந்தை 2ம் வாதி சரண்யா ஆகும். எனது மாமனார் இறந்துவிட்டார். மாமியார் இந்த வழக்கில் 3ம் வாதியாக சேர்த்து வழக்கு தாக்கல் செய்துள்ளேன். 1 முதல் 3 பிரதிவாதிகளின் பிறப்பு சான்றிதழ்களை பார்த்தால் எனது கணவருக்கு மேற்படி மூவரும் வாரிசுகள் என்று தெரிய வரும் என்றால் சரிதான். 1 முதல் 3 பிரதிவாதிகளின் பிறப்பு சான்றிதழ்களில் எனது கணவர் பாஸ்கரன்தான் தகப்பனார் என்று உள்ளது என்றால் சரியல்ல. மேற்படி ஆவணத்தை பரிசீலனை செய்து விசாரித்துதான் வாசாஆ 8 ஆவணம் 4ம் பிரதிவாதியால் வழங்கப்பட்டுள்ளது

என்றால் சரியல்ல. நான் வழக்கிற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும், நான் கோரியுள்ள பரிகாரம் எனக்கு கிடைக்கதக்கதல்ல என்றாலும் சரியல்ல.

x

Taken down by Typed to my dictation
in Open Court read over to the witness
admitted and acknowledged by
him/her to be correct.

Sd/- P.Rangeswari,
District Munsif cum Judicial Magistrate,
Thiruvidaimarudur. (FAC)